1970 மார்ச் 12]

இவ்வரசு வலியுறுத்தியது. இதன் முதல் நடவடிக்கையாக மாமல்லபுரத்திலிருந்து தென் ஆற்காடு மாவட்ட எல்லை வரை 25 மைல் நீளமுள்ள சாலைத் தொடர்பு அறுபட்ட பகுதியை அமைப்பதற்கான வேலை எடுத்துக்கொள்ளப்பட்டது. கிழக்குக் கடற்கரைச் சாலை அமைப்பில் கோவளத்துக்கு அருகே உப்பங் கழியின்மீது பாலம் கட்டும் வேலையை மேற்கொள்வதற்கும் இந்திய அரசு ஒப்புதல் அளித்துள்ளது.

திரு. ந. தருமலிங்கம்: இந்த சேதுச்சாலையையொட்டி தஞ்சை மாவட்டத்தில் தென் பகுதியில் தஞ்சை மன்னர்கள் ஆண்ட காலத்தில் கட்டி வைக்கப்பட்ட சத்திரங்கள்—அம்மணிசத்திரம், ராஜாமடம் சத்திரம்—போன்ற சத்திரங்கள் கவனிப்பாரற்றுக் கிடப்பதையொட்டி இந்த ரோடு அமைக்கப்படும்போது அவை களையும் புனரமைப்பு செய்வதற்கு அரசாங்கம் முன்வருமா?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: அதுபற்றிய செயற் குறிப்பு இல்லை.

பரமக்குடி பயணியர் விடுதி

*341 வினா—**திரு. வீ. மலைக்கண்ணன்:** மாண்புமிகு பொதுப் பணித்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பரமக்குடியில் உள்ள பயணியர் விடுதியை விஸ்தரிக்கும் செயற்குறிப்பு ஏதேனும் உண்டா?

(இ) ஆம் எனில், எப்போது வேலை துவங்கும்?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: (அ) இல்லை.

(இ) இக் கேள்விக்கு இடமில்லை.

Educational finance of Panchayat Union Councils

*342 Q.—THIRU K. VINAYAKAM: Will the Hon. the Minister for Local Administration be pleased to state:

(a) whether the Government have constituted a ten-member Committee to review the educational finance of the Panchayat Union Councils in the State; and

(b) if so, the names of those members?

மாண்புமிகு திரு. மா. முத்துசாமி: (அ) ஆம்.

(இ) (1) அரசுச் செயலாளர், கிராம வளர்ச்சி-உள்ளாட்சித் துறை—தலைவர்.

அரசு சார்புள்ள உறுப்பினர்கள்.

(2) கிராம வளர்ச்சித் துறை இயக்குநர்.

(3) அரசுத் துணைச் செயலாளர், கல்வித் துறை.

(4) துணைச் செயலாளர் (திட்டம்), நிதித் துறை.